# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1954/35 - 2016 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2016.02.19

*1954/35 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/1992* III

**1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டம்**

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள், கனிப்பொருள்கள் சட்டத்தின் 64 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2016, மாசி 3.

ஒழுங்குவிதிகள்

1993 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதுமான 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சுரங்கத்தொழில் (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள், அதன் 42 ஆம் ஒழுங்குவிதியில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) “கட்டிடப் பொருட்கள்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

“ “கட்டிடப் பொருட்கள்” என்பது, நிர்மாணத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட மணல், சரணைக்கல், மண், துருக்கல், சுண்ணவெளிமப்பாறை என்பவற்றையும், செங்கல் மற்றும் ஓடு என்பவற்றைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மாக்கல், பாறைக்கல் திரள்கள் மற்றும் களிமண்கள் என்பவற்றையும் உள்ளடக்கும் ;”;

(2) “கைத்தொழிற் கனிப்பொருள்கள்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

“ “கைத்தொழிற் கனிப்பொருள்கள்” என்பது, இல்மனைற்று, சேர்க்கன், உருத்தைல், மொனசைற்று, பவளம், சிப்பிப் படுக்கைகள், பென்சிற்கரி, பந்துக் களி, மட்பாண்ட மற்றும் சீமெந்துக் களி மண், கயோலின், மைக்கா, களிக்கல், சுண்ணாம்புக்கல், உப்பு, உறைகளிக்கல், மஞ்சட்காவி, மாழைமண் (கண்ணாடி மணல்), படிகம், காணற்று, சிலிமனைற்று, கல்சைற்று, அலனைற்று, புளோர்க்களிக்கல், சேர்ப்பன்டினைற்று, அப்பற்றைற்து, உரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட சுண்ண வெளிமப்பாறை, மக்னறைற்று, மகனிசைற்று, சக்கை நிலக்கரி, வொலஸ்ரோனைற்று மற்றும் உருவளவைக் கல் என்று பொருளாகும்;”.

03-143

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.